**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 660/2025**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | அழகம்மாள் | **Caste** | : | |
| **Husband's Name** | : | நாகராஜ் | **Calling** | : | அங்கன்வாடி உதவியாளர் |
| **Village** | : | தேவநாயக்கன்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **49** |
| | | | **Dated** | : | **09.09.2025** |

**09.09.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 திருமதி. **அழகம்மாள்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரி ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் தேவநாயக்கன்பட்டியில் குடியிருந்து அங்கன்வாடி உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது கணவர் இறந்துவிட்டார்.இவ்வழக்கு சம்பவத்தில் இறந்த ரஞ்சித்குமார் எனது மகன். எனது மகன் ரஞ்சித்குமார் சென்ரிங் வேலை செய்து வந்தார். எனது மற்றொர் மகன் பெயர் வேடமுத்து அவர் படித்து வருகிறார். ரஞ்சித்குமார் கடந்த 14.02.2025ம் தேதி வழக்கம் போல் அவரது இருசக்கர வாகனத்தில் வேலைக்கு சென்றார். அன்று மாலை சுமார் 5.00 மணிக்கு போலிசார் எனக்கு போன் செய்து எனது மகனுக்கு விபத்து நடந்ததாக தகவல் சொன்னார்கள். தகவல்

கேள்விப்பட்டு திண்டுக்கல் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எனது மகனுக்கு தலையிலும் , கைகளிலும்,கால்களிலும் அடிப்பட்டிருந்தது. சம்பவம் பற்றி விசாரித்தபோது எனது மகன் இருசக்கர வாகனத்தில் வத்தலகுண்டு பைபாஸ் ல் இருந்து தெற்கில் இருந்து வடக்கு நோக்கி முத்தழகு பட்டி பிரிவு அருகே வடக்கு இருந்து தெற்கு நோக்கு வந்த ஈச்சர் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துக்கொண்டேன். இந்த சம்பவத்தில் எனது மகன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இது சம்பந்தமாக நான் போலிசில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் அ.சா.ஆ,1 ஆகும்**) .போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

என் மகன் இறந்தது குறித்து மாலை 5.00 மணியளவில் போலிசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். பொன்மாந்துரை நல்லுச்சாமி மகன் குமார் மற்றும் பழனிச்சாமி மகன் பெரியசாமி இரண்டு நபர்களும் எனது மகன் வேடமுத்து தகவல் சொல்லிதான் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்களில் ஒருவர் மரக்கடையிலும் மற்றொருவர் தோல் ஷாப் லும் வேலை பார்க்கிறார்கள். அவர்களின் வேலை நேரம் குறித்து எனக்கு தெரியாது. அவர்கள் இருவரும் கேள்விப்பட்டு வந்தார்கள் என்றால் சரிதான்.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.09.09 17:25:00 +0530

Judicial Magistrate No.I

Dindigul.